## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **S.TC. No. 390/2025** |
| Prosecution witness | : | P.W. 1 |
| List of witness | : | L.W.1 |
| Name | : | விக்னேஷ் |
| Father's /Husband Name | : | பக்தவச்சலம் |
| Village | : | செம்மங்குடி |
| Taluk | : | குடவாசல் |
| Age | : | 33 |
| Occupation | : | ஜியோ டவர் கம்பெனி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, 24th day of March 2026.
Both Accused present.

**முதல் விசாரணை**

நான் தற்போது குடவாசல் தாலுக்கா செம்மங்குடி கிராமத்தில் வசித்து வந்து ஜியோ டவர் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் எனது ஊரை சேர்ந்தவர்கள். நான் ஒரு நாள் தேதி சரியாக நினைவில்லை வீட்டில் இருந்த போது கூட்டமாக சத்தம் போட்டு கொண்டிருந்தார்கள். நான் என்ன சத்தம் என்று பார்க்க சென்ற போது கூட்டத்தில் யாரோ ஒருவர் என்னை அடித்தார். ஆஜர் எதிரிகள் அங்கு இருந்ததால் சந்தேகத்தின் பேரில் அவர்கள் மீது புகார் கொடுத்தேன். மேற்படி புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ஆஜர் எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்க.

**அரசு தரப்பு சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 154 பிரிவின் கீழ் அரசு தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன் பேரில் வழக்கு கோப்பின் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

நானும் எதிரிகளும் ஒரே ஊரை சேர்ந்தவர்கள் என்பதால் தற்போது சமாதானம் செய்துகொண்டோம் என்றால் சரிதான். எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள சமாதான மனுவில் நான் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். சமாதான மனுவில் உள்ள

சாட்சி கையொப்பம் என்னுடையதான். **அந்த கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

கடந்த 14.09.2020 ம் தேதி சுமார் மாலை 04.00 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்த போது ஆஜர் எதிரிகள் என்னை குச்சிகாரி மவனே தேவடியா மவனே தகாத வார்த்தைகளால் திட்டினார் என்றும் பின்பு ஆஜர் எதிரிகள் கிரிக்கெட் விளையாட ஸ்டம்பால் என்னை அடித்தார்கள் என்றும்நான் அதை தடுத்ததில் எனது வலது கையில் இரத்த காயமும் தலையில் காயமும் இடது கையில் உள் காயமும் ஏற்பட்டது என்று நான் சத்தம் போடவே என்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டி சென்றார்கள் என்றும் பின்பு எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன் என்றும்போலீசார் விசாரணையிலும் கூறிவிட்டு தற்போது எதிரிகளுடன் சமாதானம் செய்து கொண்டதால் எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** :- இல்லை.

**மறு விசாரணை**

இல்லை.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.24 13:36:10 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.